**செய்தி வெளியீடு எண் : 2383** **நாள் : 29.12.2022**

**செய்தி வெளியீடு**

**மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் ஒரு கோடியே ஒன்றாவது பயனாளிக்கு மருத்துவப் பெட்டகத்தை வழங்கி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, அரசு மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக மருத்துவக் கருவிகளின் சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (29.12.2022) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், சன்னாசிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், ஒரு கோடியே ஒன்றாவது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை வழங்கினார். மேலும், 12 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவத் துறை கட்டடங்களை திறந்து வைத்து, அரசு மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ள மருத்துவக் கருவிகளின் சேவைகளையும் தொடங்கி வைத்தார்.

**மக்களைத் தேடி மருத்துவம்**

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை கடந்த 5.8.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் 45 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ளவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று தேவையான மருந்துகள் வழங்குதல், நோய் ஆதரவு சேவைகள் (Palliative Care), இயன்முறை மருத்துவ சேவைகள் (Physiotherapy) மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு சுய டையாலிசிஸ் செய்துகொள்வதற்கான (CAPD) பைகள் வழங்குதல் போன்ற ஏழை எளிய மக்களுக்கு தேவையான அனைத்து சுகாதார சேவைகளையும் களப்பணியாளர்கள் மூலம் பயனாளிகளின் இல்லங்களிலேயே வழங்கப்படுகின்றன.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், 10,969 பெண் சுகாதார தன்னார்வலர்கள், 4,848 இடைநிலை சுகாதார செவிலியர்கள், 2,448

சுகாதார ஆய்வாளர்கள், 2,650 ஆஷா பணியாளர்கள் சேவைகளை வழங்கி வருகிறார்கள். இத்திட்டத்திற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 463 வாகனங்களில், ஒரு இயன்முறை பணியாளர் மற்றும் ஒரு நோய் ஆதரவு செவிலிலியர் அடங்கிய 463 குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்கள் மற்றும் நகர்புறங்களில் சேவைகளை வழங்கி வருகின்றன.

இத்திட்டத்தின் முதல் பயனாளியான கிருஷ்ணகிரி மாவட்டம் சாமனப்பள்ளி கிராமத்தில் வசிக்கும் திருமதி சரோஜா அவர்களுக்கு 5.8.2021 அன்றும், 50 இலட்சத்து ஒன்றாவது பயனாளியான செங்கல்பட்டு மாவட்டம், சித்தாளப்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் 75 வயதுடைய திருமதி பாஞ்சாலை அம்மாள் அவர்களுக்கு 23.02.2022 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மருத்துவ பெட்டகம் வழங்கப்பட்டது.

இன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், சன்னாசிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒரு கோடியே ஒன்றாவது பயனாளியான திருமதி மீனாட்சி அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மருத்துவப் பெட்டகத்தை வழங்கினார்.

இந்த திட்டத்தின் சேவையை மேலும் மேம்படுத்திட 10,969 பெண் சுகாதார தன்னார்வலர்கள் மற்றும் 15,366 அங்கன்வாடி மைய ஊழியர்களுக்கு இரத்த அழுத்தம் கண்டறியும் டிஜிடல் இரத்த அழுத்த கருவிகளை (Digital B.P. Apparatus) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

<u>முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்</u>

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 4.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவப் பதிவேடு அறை, கருத்தரங்கு கூடம் மற்றும் விரிவுரைக் கூடம், விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கதிர்வீச்சு புற்றுநோயியல் பிரிவுக் கட்டடம், காஞ்சிபுரம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தலா 1.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நல மாவட்ட ஆரம்ப இடையீட்டு மையங்கள், திருப்பூர் மாவட்டம், நம்பியாம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், வேலூர் மாவட்டம், மேல்பட்டியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2.24 கோடி

ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம், என 12 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவத் துறைக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**<u>அரசு மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ள மருத்துவக் கருவிகளின் சேவைகளை தொடங்கி வைத்தல்</u>**

விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரியில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சை கதிரியக்க டெலிகோபால்ட் கருவி, செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அரசு காசநோய் மருத்துவமனையில் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன சி.டி. ஸ்கேன் கருவி ஆகிய மருத்துவக் கருவிகளின் சேவைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேலும், 2025–ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லா தமிழ்நாடு எனும் இலக்கை அடைய, காசநோய் மற்றும் மருந்து எதிர்ப்பு காசநோய் (MDR–TB) ஆகியவற்றை உடனடியாக கண்டறியும் CB – NAAT என்ற 46 புதிய கருவிகள் பெறுவதற்கான ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**<u>மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை செயல்படுத்திடும் சுகாதார பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்</u>**

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை செயல்படுத்திடும், பெண் சுகாதார தன்னார்வலர்கள், இடைநிலை சுகாதார செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**<u>மணிகண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள மூன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்ட தேசிய தரச் சான்றிதழ்கள்</u>**

தமிழ்நாட்டில் முதன்முறையாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள மூன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் பெற்ற தேசிய தரச் சான்றிதழ்களை மருத்துவ அலுவலர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து, வாழ்த்துப் பெற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.என். நேரு, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. சு. திருநாவுக்கரசர், செல்வி. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ். இனிகோ இருதயராஜ், திரு.சீ. கதிரவன், திரு.அ. சௌந்தரபாண்டியன், திரு. ந. தியாகராஜன், திரு. செ. ஸ்டாலின் குமார், திரு.எம்.பழனியாண்டி, திரு. அப்துல் சமது, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு. மு. அன்பழகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் திட்ட இயக்குநர் டாக்டர் எஸ். உமா, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. பிரதீப் குமார், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் டி.எஸ். செல்வவிநாயம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் இயக்குநர் டாக்டர் வி.பி. ஹரி சுந்தரி, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ஆர். சாந்திமலர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

----- -----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in